திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

ஒரு பொறுப்பான அப்பாவைப் போல் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நம்

முதல்வர் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாகச் செய்து வருகிறார்!

வேளச்சேரியில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் – தயாநிதிமாறன் எம்.பி. பேச்சு!

சென்னை, மார்ச் 6 -

'ஒரு' பொறுப்பான அப்பாவை போல் நம் முதல்வர் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல் வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்" என்று தயாநிதி மாறன் எம்.பி. அவர்கள் கூறினார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்க ளின்72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக மருத்துவ அணியின் சார்பில் நடைபெற்ற வலையொலிபரப்பு நிகழ்ச்சியில் கழக விளை யாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி ஆற்றிய உரை வரு மாறு:

எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தலைப்பு 'திராவிட மாடல் நாயகர் ஒரு வாழும் சாகப் தம்.'

தி.மு.க. இளைஞரணி

இது எங்கள் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உரித்த மாகும். ஏனெனில் அவர் சிறிய வயது முதல் கழகப் பணியிலே குறிப்பாக தமிழ்நாடு முன் னேற வேண்டும் என்ற ஒரே நோக்கதோடு பல்வேறு பணியிலே தன்னை ஈடுப்படுத்திக் கொண்டுள்ளார். நான் சிறு வயதிலிருந்து பார்த்தப்போது கோபாலபுரத்திலே எங்கள் தெருமுனையில் இருந்த சிறிய இடத்தில் திமுக இளைஞரணியை அமைத்து பிறகு அதில் நானும் ஒரு உறுப்பினராக இருப்பது எனக்கு இன்று பெருமையாக இருக்கிறது.

அதேபோல் முதன்முறையாக கோபாலபு ரத்திலே அப்போதைய நடிகர் எம்.ஜி.ஆரை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்திய பெருமை யாருக்கு உண்டு என்றால் அது நமது கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர் களுக்கு உண்டு. மேலும் ஒன்று பார்த்தீர்கள் என்றால் தொடர்ந்து கழகப் பணியில் ஈடுபட் டடார் என்ற ஒரே காரணத்திற்காக திமுகவை யும் , திராவிட கொள்கைகளும் அவர் முன் னெடுத்து செல்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக கொடிய மிசா நேரத்திலே அவரை கைது செய்து அடித்து துன்புறுத்தினர். அதிலும் மீண்டெழுந்து கழகப் பணியை நான் தொடர்வேன் என்ற உறுதியுடன் செயல்பட் டவர்தான் நம் கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்.

மகளிர் சுயஉதவிக் குழு

முதன்முதலில் ஒன்றுப்பட்ட சென்னை மாநகரம் ஒரு மேயரை நேரிடையாக தேர்ந் தெடுத்தது என்றால், அதுவும் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மேயர் என்கிற பெருமை யாருக்கு சாரும் என்றால் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை மட்டுமே சாரும். அப் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர மேய ருக்கான பணியை செவ்வனே செய்திட வேண்டும் என்று சென்னையிலே கிட்டத்திட்ட 10 மேம்பாலங்களை அமைத்து சென்னை போக்குவரத்து நெரிசலை போக் கிய பெருமை யாருக்கு சாரும் என்றால் நம் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களையே சாரும்.

அதேபோல் தொடர்ந்து மேயராக பணி யாற்றியபோது மழைவந்தபோதும், வெள்ளம் வந்தபோதும் முதல் ஆளாக நின்றவர் யார் என்றால் நமது தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்தான். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், தொடர்ந்து மக்கள் பணியிலே அவர் தன்னை ஈடுபடுத்தி கொண் டுள்ளார். பிறகு அவர் உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்பேற்று செயல்பட்ட காலத்திலே தனி ஆளாக நின்று, குறிப்பாக மக ளிர் சுயஉதவி குழுகளுக்கு, அவர்களுக்கான கடன் உதவிகளை, கிட்டத்திட்ட 12 மணிநே ரம் நின்று கொடுத்த பெருமை யாரை சாரும் என்றால் நமது கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களையே சாரும்.

தமிழ்நாட்டின் குரல்

அதேபோல் துணை முதலமைச்சராக இருந் தபோதும் டெல்லியிலே, தமிழ்நாட்டில் உரி மைகளுக்கு குரல் கொடுத்தவர் யார் என்றால் நமது தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். பிறகு சொன்னார்கள் இவர் முதலமைச்சரே ஆகமாட்டார். இவருக்கு கட்டம் சரியில்லை. அந்த பொய்யான சுழ்ச்சிகளை எல்லாம் உடைத்து, தமிழ்நாட்டை காக்க நான் இருக் கிறேன். தமிழ்நாட்டு மக்களின் குரலாக நான் இருக்கிறேன் என்று குரல் கொடுத்தவர் யார் என்றால் நமது கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

இன்றுகூட நினைவிருக்கிறது, அதுவும் பசு மையாக இருக்கிறது. அந்த வரலாற்று சம்ப வத்தை நினைக்கும்போது புல்லரிக்கின்றது. ஆளுநர் மாளிகையில் கழக தலைவர் பதவி ஏற்கும்போது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் என்று கூறியபோது அந்த அரங்கமே அதிர்ந்தது. காரணம் என் வென்றால் மீண்டும் கலைஞரை பார்த்ததை போல், மீண்டும் கலைஞர் அவர்களின் குரலை கேட்டதைப்போல், கலைஞரே அங்கு நின்று தன்னை பதவி பிரமாணம் அங்கே செய்து கொண்டதைபோல உணர்வை உணர்வை நமக்கு தந்தார். இன்று நான் பதவி ஏற்கிறேன். ஆனால், நாம் சந்தித்த இன்னல்கள், இந்தி திணிப்பு, ஆதிக்க சக்திகளின் எதிர்ப்பு, அது மட்டும் இல்லாமல் ஒன்றிய அரசு ஓரவஞ் சனை, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற குரல் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக் கின்றது. பல்வேறு வழிகளில் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றது. இந்த அச்சுறுத்தல்களை எல் லாம் எடுத்தெறிவேன். தமிழகத்தின் உரிமை யாக நான் குரல் கொடுப்பேன் என்றார். இந் தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத புரட்சியை அவர் செய்ய துவங்கினார்.

காலை உணவுத்திட்டம்

பிற மாநில முலமைச்சர்கள் எல்லாம் இவ ரது செயலைப் பார்த்து ஆச்சர்யப்பட்டனர். நாமும் இதுபோல அற்புறமான காலை உணவு திட்டத்தை கொண்டு வந்திருக்கலாமே என ஆதங்கப்பட்டனர். பள்ளி செல்லும் சிறார்க ளுக்கு காலை உணவு திட்டத்தை இந்தியாவி லேயே சிறப்பாக நடைமுறை படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான், தமிழ்நாட் டிலுள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் அந்த திட்டத்தை சிறப்பாக செய்த பெருமை நம் முதல்வர் அவர்களையே சாரும். இதை பார்த்து மற்ற மாநிலங்கள் இதை நாம் ஏன் முன்னரே செய்ய முடியவில்லை என ஆச்சர் யபடத்தக்க வகையிலே இத்திட்டத்தை நடை முறைப்படுத்தினார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதுமட்டுமா மகளிருக்கு உரிமைத் தொகை 1000 ரூபாய் நான் வழங்குகிறேன் என்றார்.

இது நடக்காதே, செய்ய முடியாதே, முடி யுமா ? என்று பலரும் பொய்ப் பிரச்சாரத்தை துவங்கினார்கள். கிட்டதிட்ட 1 கோடியே 16 லட்சம் தாய்மார்களுக்கு இன்று மாதம் அவர வர் வங்கி கணக்கிலே செலுத்துகிற திட்டத்தை சிறப்பான முறையிலே செய்து, இதை கிண்ட லடித்த பா.ஜ.க கூட அவர்கள் ஆட்சியைப் பிடித்துள்ள டெல்லிலேயே அதை பின்பற்றுகிறார்கள். இதுதான் எங்கள் தலை வர் தளபதி.

வாழும் சகாப்தம் நம் தளபதி

அவரை நான் ஏன் வாழும் சகாப்தம் என்று சொல்கிறேன் என்றால், செய்த ஒவ்வொரு திட்டமும், ஏன் கொரோனா நேரத்திலே எந்த ஒரு எதிர்க்கட்சியாவது வெளியே வந்ததா? இல்லையே எந்த அரசியல்வாதியாவது வெளியே வந்தாரா? அப்போது பார்த்தீர்களே யானால் அவரே முன்நின்று ஒவ்வொரு பக்க மும் சென்று, கொரோனாவால் பாதிக்கப்பட் டார்களோ அவரிகளின் சிகிச்சையை பற்றியும், கொரோனா வார்டுக்கு செல்ல அச் சம்படும் நேரத்திலே கூட, மருத்துவர்களே கொரோனா வார்டுக்கு செல்ல அச்சப்படும் போதும், நேராக மருத்துவமனைக்கு சென்று தமிழ்நாட்டு மக்கள் என் மக்கள் உங்களுக்காக நான் பாடுபடுவேன் என்று கொரோனாவில் இருந்து விடுபட இலவச தடுப்பூசிகளை வழங்கி இந்த தமிழகத்தை மீட்டவர் அவர் தான். இதை பின்பற்றிதான் மற்ற மாநிலங்க ளும் இலவச ஊசி திட்டத்தையே பின்பற்றின. இவ்வாறு சிறப்புற நல்லாட்சி புரிந்தார்.

அதுபோலவே பார்த்தீர்களேயானால் நான் முதல்வன் திட்டம் சிறப்பான திட்டம். மாண வர்களே நீங்கள் அச்சுறாதீர்கள். நீங்கள் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். உங் களுக்கு தன்னம்பிக்கை வேண்டுமா? அதற் கான திறமைகளை நாங்கள் கற்று தருகிறோம் என்று சொன்னவர். அதுபோல் கல்வியா, அரசு பள்ளியில் படித்தீர்களா? அரசு பள்ளி யில் படித்தால்போதும் உங்கள் கல்லூரி படிப்பை நாங்கள் ஏற்றுகொள்கிறோம். அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற திட்டத்தை சிறப்பான முறையிலே செய்து தமிழருக்கும், தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்து கொடுத் தார்.

கீழடியில் தொல்லியல் ஆராய்ச்சி

அதேப்போல் கீழடியிலே நமது சமுதாயம் எத்தனை ஆண்டுக்கு பின் உருவானது என் பதை சிறப்பாக செய்திருக்கிறார். பலருக்கு தமிழ்மொழியும், தமிழர்களின் பண்பாடும் எவ்வளவு அதன் ஆண்டு பழமையான சமு தாயம் என்பது தெரியாமல் இருக்கிறது. இப் போது போல இரும்புகாலம் எங்கிருந்து தோன்றியது என்றால், அது தமிழ்நாட்டிலி ருந்து தோன்றியது என்று சொல்கிற அளவுக்கு தமிழின்சிறப்பை உலகறிய செய்தவர்தான் நமது கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மும்மொழி கொள்கை

இன்றைக்கு இந்தி மொழியை நம் மீது திணிக்கும் முயற்சியில் ஒன்றிய பாஜக அரசு ஈடுபட்டு வருகின்றது. ஆனால், எதுவுமே தெரி யாத அப்பாவிபோல் ஐயா நான் இந்தியை புகட்டவில்லை. மும்மொழி கொள்கையை தான் சொல்கிறோம். இது உங்கள் பிள்ளைக ளுக்கு நல்லது. உங்கள் பிள்ளைகள் படித்தால் முன்னேறுவார்கள் என்று கூறி வருகின்றது. அதற்கு எதிர்ப்பு குரல் கொடுத்து, மும்மொழி கொள்கையை நாங்கள் எந்த நேரத்திலும் ஏற் கமாட்டோம் என்றார் நம் முதலமைச்சர் முத் துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

நிதியை தரமறுக்கும் ஒன்றிய அரசு

அதற்கு ஒன்றிய அரசோ மும்மொழி கொள்கையை ஏற்று கொள்ளாவிட்டால் உங் களுக்கான ஒன்றிய அரசின் நிதியை நாங்கள் தரமாட்டோம் என்ற போதும் கூட, நீங்கள் பணத்தை தராவிட்டாலும் கூட பரவா யில்லை. எங்கள் பிள்ளைகளின் படிப்பை எங் கள் தமிழ்நாட்டின் செலவில் நாங்கள் சந்திப் போம் என்று சொல்லி, நீங்கள் பத்தாயிரம் கோடி கொடுக்கவிட்டாலும் பரவாயில்லை. நாங்கள் தமிழ்நாட்டு மக்களை முன்னேறுவோம் என்று சொல்லி, ஏன் எங் கள் பிள்ளைகள் மூன்று மொழி படிக்க வேண் டும். ஆனால் உங்கள் பிள்ளைகள் மட்டும் ஒரே மொழி அதுவும் இந்திமொழி. அதுவும் இந்தி மட்டுமல்ல இன்று ஆர்எஸ்ஸின் கொள் கையாக, சித்தாந்தமான சமஸ்கிருதத்தை படிக்க வேண்டுமா என நமது தலைவர் வினா எழுப்பினார்கள். இந்தி மொழியை மட்டுமே பயின்ற பல இலட்சக்கணக்கான இளைஞர் கள் வடநாட்டில் வேலைவாய்ப்பின்றி தமிழ் நாட்டில் வேலை செய்கிறார்கள். இந்தி மட் டுமே பயில்வதால் ஒரு பயனுமில்லை. நாங்கள் எந்த மொழிக்கும் எதிரியல்ல. ஆனால், எந்த மொழியையும் எங்கள் மீது திணிக்காதீர்கள். அந்த திணிப்பை நாங்கள் எதிர்ப்போம் என்று கூறியவர் நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

தொகுதி சீரமைப்பு

அதுபோல இன்று வேறு ஒரு வழியாக, ஏதோ நமக்கு நல்லது செய்வதுபோல் தொகுதி சீரமைப்பு என்ற பெயரில், நாடாளுமன்றத் திலே உள்ள நமது எண்ணிக்கை குறைப்பதற்காக இந்த ஆளும் பாஜக அரசு, மோடி அரசு, அமித்ஷா அரசு, குறுக்கு வழி யிலே ஜனத்தொகை மக்கள் கணக்கெடுப்பு வழியாக நாங்கள் நாடாளுமன்றத்தின் எண் ணிக்கையை சரிசெய்வோம். சரிசெய்ய வில்லை , குறைக்க போகிறோம் என்றவுடன், முதல் குரலாக தளபதி குரல் கொடுத்த பின்பு, ஆந்திரமும், கர்நாடகமும், கேரளமும், பஞ் சாப்பும் இல்லை முடியாது. நாங்கள் எல்லாம் பின்பற்றி இருக்கிறோம். இது தவறான முன் னுதாரணம். நீங்கள் மக்கள் தொகை கணக் கெடுப்பு என்று சொல்லி நாங்கள் எல்லாம் பின்பற்றி இருக்கிறோம். அதற்கு தண்டணை யாக மக்களவையிலே எங்களுடைய எண் ணிக்கை குறைப்பது எந்தவகையிலே நியாயம். மக்கள் தொகை குறைப்பு கொள்கையை பின் பற்றாத மாநிலங்களான உத்தரபிரதசம், மகா ராஷ்டிரம், பீகார், ராஜஸ்தான் எல்லாம் ஜனத்தொகையை பெருகிவிட்டு, நாங்கள் மட்டும் நாம் இருவர் நமக்கு இருவர் அல்லது நாம் இருவர் நமக்கு ஒருவர் என்று கட்டுப்பா டாக மக்கள் தொகையை கட்டுப்படுத்தி னோம். சட்டத்தை பின்பற்றாதவர்களுக்கு அல்வா, எங்களுக்கு சூடா? இது எந்தவகை யில் நியாயம்? இதை எதிர்த்து கேட்ட ஒரே குரல் யார் என்றால், அது முத்துவேல் கருணா நிதி ஸ்டாலின் அவர்கள்.

பெண்களுக்கான உரிமைகள்

பெண்களுக்கு சமஉரிமை என்று சொன் னார்கள். ஆனால் பாராளுமன்ற தேர்தலிலே 33 சதவீதம் கொடுத்து, இன்று பல நகராட்சி களிலே பெண்கள் மேயராக இருக்கின்ற வாய்ப்பை தந்தவர் யார் என்றால் அது நமது தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஒரு சிறந்த முதல்வர், சிறந்த தலைவர் இன்று அதையும் தாண்டி இந்த தமிழ்நாட்டு பிள்ளைகள் எல்லாம் அப்பா, அப்பா என்று அன்பாக அழைக்கின்றார்கள். காரணம் அவர் ஒரு பொறுப்பான அப்பாவை போல தொடர்ந்து, தன் பெற்ற பிள்ளைக்கு என் னென்ன செய்வரோ அதை தமிழ்நாட்டு பிள் ளைகளுக்காக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு பணி களை, பல்வேறு மக்கள் நலன்பயக்கும் திட் டங்களை செய்து வருகின்றார்.

இப்படி பல்வேறு சிறப்புக்களை செய்துவ ரும் திராவிட மாடல் முதல்வர் அவர்கள் பல் லாண்டுகள் வாழ்ந்திட வேண்டும் என கூறி, இந்த வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தி தந்த மருத்துவ அணியினருக்கு, குறிப்பாக அணி யின் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநா தன் அவர்களுக்கும், இனிய சகோதரி மருத்து வர் திருமதி கனிமொழி என்விஎன் சோமு அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக் களை தெரிவித்துக் கொண்டு, நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் செய்திருக் கின்ற சாதனைகளை, திட்டங்களை மக்களி டம் கொண்டு செல்கின்ற பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என கேட்டு வாழ்க தமிழ், வாழ்க கலைஞர், வாழ்க தளபதி என்று கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு தயாநிதிமாறன் எம்.பி. பேசி னார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று (5.3.2025) புதன்கிழமை மாலை 5 மணி, ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் தளி ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக அமைப்பு துணைச் செயலாளர் ப. தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் - கழக தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

கிருஷ்ணகிரி, மார்ச்.6

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய திமுக சார் பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று (5.3.2025) புதன்கி ழமை மாலை 5 மணி, ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் நடை பெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒன் றிய அவைத் தலைவர் எம். சின்ராஜ் தலைமை வகிக்கி றார். நகர செயலாளர் கே என் ஆர் நாகராஜன் வர வேற்புரையாற்றுகிறார். எல்.ஆர். ஜெயராமன் எம். கணேஷ், என். சின்னப்பையன் ராமி, குண சேகரன் எம். முருகன் ஆகி யோர் முன்னிலை வகித்த னர் .

கழக அமைப்பு துணைச் செயலாளர் பா. தாயம்கவி எம்எல்ஏ சிறப்புரை யாற்றி னார். அமைச்சர் அர. சக்கர பாணி, மாவட்ட செயலா ளர் ஒய். பிரகாஷ் எம். எல்.ஏ., பி முருகன், எஸ்.ஏ.சத்யா மற்றும் கிளை கழக செயலாளர்கள், பிரதி நிதிகள், இன்னாள், முன் னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள் BLA 2, BLC யூத் கமிட்டி முகவர்கள், மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவ ரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட பிர திநிதி பி. ரஜினி நன்றியுரை ஆற்றினார்.